
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல் சுடர்

தை - 1995 ❀ ''மன்று'', 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு.



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலினுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் ''சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்'' இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

பூத மொன்று விரைந்துவந்து
பூமிதனைக் கொண்டு செல்ல
பூரிப்பாய் பூமியதில்
புகுந்ததடா புரட்டுதடா
யாரென்று நீ கேட்பாய்
பாவி உந்தன் செயல்மறந்து
உயிர்களுக்கு உலைவைக்க
அணு யுத்தம், பரிசோதனை
நாடகங்கள் நடத்துகின்றாய்
நொடிப் பொழுதில் போகும் உயிர்
நல்லவனாய் வாழ நினை.




ஆசிரியர் குழு

கா. நடராசா (சனசமுக அ. உ.)
நி. ஜெயராஜா (சனசமுக அ. உ.)
வி. இராமச்சந்திரா (குறுமண்வெளி சிவசக்தி வித்)
எம். இராஜேந்திரம் (தன்னாமுனை புனித வளனார் வித்)
சோ. சுந்தரமோகன் (கோல்ட்பிஸ் வி. க.)
கே. ரதிச்சந்திரிக்கா (தடாகம், சந்திவெளி)

## உள்ளடக்கம்

அணுப்பூதம் ... 1
செல்வன் ரீ. பிரபா

நீங்கள் அறியவேண்டிய விடயங்கள் 2

காங்கேயனோடை இறால் வளர்ப்பு சம்பந்தமான SEDO SRI LANKAவின் கடிதம் 2

மண் பாதுகாப்பு ... 3
செல்வி ஈ. எல். சமீமா

எலுமிச்சை ... 4
தேவதாஸ் (ஆசிரியர்)

கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே 4

வேப்ப மரம் ... 5
திரு. கு. விமலேஸ்வரன்

ஆரோக்கியமாக வாழ்வது எப்படி? 5
செல்வி ந. டிலுக்ஷி

இன்றும் அதே நிலை ... 6
திருமதி வீ. இராமச்சந்திரா

மண்முனை வடக்குப் பிரதேச சுற்றாடல் ஊக்குவிப்புக் குழுக் கூட்டம் ... 8

### கார்த்திகை மாத போட்டி முடிவுகள்

1ம் இடம் - கோ. இராஜகோபால்
ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்,
தாழங்குடா - 02, ஆரையம்பதி.

2ம் இடம் - ஞா. தயாபரன்
பண்டாரியாவெளி,
கொக்கட்டிச்சோலை.

3ம் இடம் - சி. பத்மா
13ம் கிராமம்,
57/3, மண்டூர்.

உங்கள் பரிசில்கள் விரைவில் அனுப்பிவைக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் அறியவேண்டிய விடயங்கள்

## பேக்கரிகளினால் சுற்றாடல் மாசுறுவதைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்துரைகள்

1. கட்டிடத்தின் நிருமாணங்கள் யாவும் தொடர்புள்ள பிரதேசத்தின் வலயப்படத்திற்கு அமைய இடம் பெறுதல் வேண்டும்.

2. பேக்கரியினால் உருவாக்கப்படும் ஒலி, சொல்லப்பட்ட நிலமனையிடங்களின் எல்லைகளில் தொடர்புள்ள வலயத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உச்ச ஒலி எல்லையை விஞ்சாதிருப்பதைப் பார்த்துக்கொள்வதற்கு கைத்தொழிலின் சொந்தக்காரர் எப்போதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

3. பேக்கரி உலைபடுப்பின் புகைபோக்கியின் உயரம் தரைமட்டத்திலிருந்து ஆகக் குறைந்தது முப்பது (30) அடியாவது இருத்தல் வேண்டும். அப்போது தான் அடுப்பு எரிவதன் விளைவாக எழும் புகையின் மூலம் ஏற்படும் வளி மாசுறுகை சுற்றுவட்டாரத்தில் வசிப்பவர்களுக்குத் தொந்தரவை ஏற்படுத்தாது.

4. உலையடுப்பின் புகைபோக்கி அண்மையில் உள்ள மாடி வீடுகளின் உயரத்திற்கு மேல் இருப்பதை பேக்கரிச் சொந்தக்காரர் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

5. எல்லையில் உருவாகும் திண்மக் கழிவுப் பொருட்கள் அனைத்தும் (ஓடுகள், கடதாசிகள், பொலித்தீன் துண்டுகள், மரக் கரி போன்றவை) ஏதாவது நீர் நிலையிலோ, நீர் மார்க்கத்திலோ எந்தச் சந்தர்ப்பத்திலாவது கொட்டப்படலாகாது. கழிவுப் பொருட்களைக் குறித்த மனையிடங்களிலிருந்து உள்ளூர் அதிகார சபையின் அறிவுறுத்துரைகளுக்கு அமைய சுற்றாடல மாசுறுகை இடம் பெறாதவகையில் நாளாந்தம் அகற்றப்படுதல் வேண்டும்.

6. பேக்கரியின் தொழிற்பாட்டின் விளைவாக சுற்றாடல் எந்த உருவிலாவது மாசுறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு பேக்கரிச் சொந்தக்காரர், மத்திய சுற்றாடல் அதிகார சபையும், உள்ளூர் ஆட்சிச் சபையும் பல்வேறு சர்தர்ப்பங்களில் வழங்கும் விதிப்புரைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளார்.

மத்திய சூழல் அதிகார சபை.
1993 ஒகத்து பிரதேச சபைகளுக்கான அறிவுறுத்தல் கையேட்டிலிருந்து.

## காங்கேயனோடை இறால் வளர்ப்புச் சம்பந்தமான SEDO SRI LANKAவின் கடிதம்

அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், மட்டக்களப்பு.
ஐயா,

**காங்கேயனோடை தெற்கு 155பீ கிராம சேவையாளர் பிரிவில் இறால் வளர்ப்புத் திட்டத்தால் சுற்றாடல் மாசடைதல்**

மேற்படி கிராம சேவகர் பிரிவில் கொழும்பைச் சேர்ந்த கஷன் கேட் என்ற தனியார் நிறுவனம் இறால் வளர்ப்புத் திட்டத்தில் ஈடுபட ஆயத்த முன்னேற்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் சூழலில் ஏற்படும் சாதக பாதக நிலை பற்றி இதுவரை சூழல் சம்பந்தமான சாத்திய வள ஆய்வு நடவடிக்கைகள் எதுவும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

இப்பிரதேசத்தில் 250 குடும்பங்கள் நிரந்தரமாக வசிப்பதோடு, 100 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களும் காணப்படுகின்றன. இந்த இறால் வளர்ப்புத் திட்டத்தால் நீர் வளமும், நில வளமும் மாசடையக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

ஆகவே, எதிர் காலத்தில் இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் நீண்டகால குடியிருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் இத்திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

பசீர் சேகு தாவூத்,
தலைவர்,
சமூகப் பொருளாதார அபிவிருத்தி அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

**கவிதைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் ஆண்டு 12 - 13ல்
ஐந்தாம் இடத்தைப் பெற்ற கவிதை**

பெயர் : செல்வி ஈ. எல். சமீமா ஆண்டு : 13
பாடசாலை : மட்/ஓட்டமாவடி பெண்கள் மகா வித்தியாலயம்.

## மண் பாதுகாப்பு

குப்பையை என் மீது
கொட்டிக் கொட்டி - என்
எழிலையே இழிவாக்கும்
மனிதா!

மண்ணைப் புனிதமாக்கத்தான்
உனக்குப் புரியவில்லை,
ஆனால் – அதை
சீரழிக்காமல்
விடவுமா
தெரியவில்லை?

என் மீதோ
கட்டடங் கட்டடங்களாகவும்!
வாகனம்
வாகனங்களாகவும்!
வெளிச்ச
மின்பொறிகளாகவும்!
என் மேனியைப்
பார்ப்பதற்கு
ஆனந்தம் எனக்கு!

ஆனால்,
மற்றொரு புறத்தில்
புகைகக்கும் வாகனங்களும்!
புகைகக்கும்
தொழிற்சாலைகளும்!
உன்னை
உயர்த்த நீ நட்டாலும்!
அதனால் நீ
உன்னையே
குழிதோண்டி
புதைத்துக் கொள்வதை
மறந்து விட்டாயா
மனிதா!

என்னிலே படரும்
இறைவனின்
படைப்பான
மரம், செடி, கொடிகளையும்
நீ நாசமாக்கும் போது
என்னை
மட்டுமல்லாமல்
நீ
உன்னையே நாசமாக்கிக்
கொள்கிறாய்!

நீ என் சோலையான
மரங்களை வெட்டுகிறாய்
அதனால் அழகான
சோலைவனமான புவி
பாலைவனமாக மாறுகிறது!

நானோ!
உனது மாளிகையையே
சூறாவளியால் அழிக்கின்றேன்
நீ எனது
பாறைகளைத்
தகர்க்கின்றாய்
நானோ!
உனது உயிருக்கே
மண் சரிவால்
உலை வைக்கின்றேன்!

ஏன்?
இத்தனை
அநீதிகளையும் - இழைக்கும்
உனக்கே – ரோசம்
இருக்கும் போது...
இவ்வளவு
அட்டூழியங்களையும் தாங்கும்
எனக்கு எவ்வளவு
ரோசமும் - கோபமும்
இருக்கும்!

மனிதா!
குப்பை கூழங்களை
என் மீது குவித்து
வைக்காதே
அதனால் - என்
பரந்த மேனியில்
சிறு பகுதியில்தான்
பாதிப்பு
ஆனால்...
உனக்கோ
உன் சிறு மேனியின்
பெரும் பகுதிகளான
நுரையீரல், இதயம், சுவாசப்பை
மட்டுமல்லாமல்
உன் உயிருக்கே
உன் பகட்டால்
உலை வைக்கின்றாய்
மனிதா!

குப்பை கூழங்களை
என்மீது குழிதோண்டிப்
புதைத்து விடேன்
அல்லாவிட்டால்
மனிதா
உன்னையே
நீ
குழிதோண்டிப் புதைத்து
விடுவாய்!

கடற்கரையை
மாணிக்கக் கற்களுக்காக
தோண்டுகின்றாப்
பைத்தியக்காரன்
நானல்ல - நீதான்
மாணிக்கம் - அழகிற்காக
அற்ப அழகிற்காக - உன்
உயிரையே அர்ப்பணிப்பது
உனக்கெங்கே
புரியப் போகிறது!

மனிதன் இருந்தால்தானே
மாணிக்கம் தேவை
மனிதனுக்கோ
மாணிக்க மோகம்
அதனால்தான்
கடற்கரை மண்ணையே
அரித்து, அரித்து
என்னை சித்திரவதை
செய்யும் போது - எனக்கு
மட்டும் - வெள்ள
மோகம் வராதா?
என்ன!

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## எலுமிச்சை

செ. தேவதாஸ்

'பல்லுப் போனால் சொல்லும் போய்விடும்' என்பார்கள். இந்தப் பல்லே வாய்க்குழியில் அடக்கம். வாய்க்குழியின் அந்தங்களைப் பாதுகாக்கும் தசைப் பகுதியை அழித்துவிடாது பாதுகாப்பதற்கு உயிர்ச்சத்தின் கூறாகிய 'சீ' அவசியமாகிறது. இதை மானிடருக்கு வழங்குவதில் சித்திரஸ் குடும்பம் பெரும் பங்கு வகிக்கின்றது.

இதன் அடிப்படையில் இன்று நாம்,

**எலுமிச்சை பற்றிக் கற்போம்**

### நிலம்

சேதனப் பசளையுடன் கூடிய உலர் வலயப் பிரதேசம் சிறந்ததாயினும் சில இனங்கள் ஈரவலயத்திற்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் பொருந்துவனவாகும்.

### இனம்

1. உள்ளூர் எலுமிச்சை
2. தகிட்டி (இது விதையற்றது)
3. லெமனையும்

### நடுகை

1. பொருள்

நடுகைப் பொருளாக விதைகளும் வெட்டுத் துண்டங்களும் பயன்படுத்தப்படலாம். வித்தில் இருந்து பல கன்றுகள் தோன்றக் கூடியதாகையால் (பல மூலவுருக்கொள்ளல்) அதில் வேறு இனக் கன்றுகளும் உருவாகக்கூடும்.

பழத்தில் இருந்து பெற்றுக்கொண்ட விதைகளை உடனே நாற்றுமேடையில் இட்டு 2 மாதங்களின் பின் பொலித்தீன் பைகளில் நட்டு வேர் கொண்ட பின் தோட்டத்தில் நடலாம்.

தகிட்டி, லெமனையும் ஆகிய இனங்களின் இடை வயிரத் தண்டுகளில் 2 - 3 இலைகளுடன் கூடிய 10 - 15 ச. மீ. நீளமான துண்டங்களைப் பெற்று நாற்றுமேடையில் வைத்து வேர் கொள்ளச் செய்த பின் தோட்டத்தில் நடலாம்.

2. இடம்

குழியானது 60x60x60 சதுர மீற்றர் கொண்டதாக அமைக்கப்படும் வரிசையில் 4 மீற்றர் இடைவெளி உடையதாகவும் வைக்கப்படும். இது இனத்திற்கு இனம் வேறுபடலாம்.

### பசளை

சேதனப் பசளை சிறந்தது. ஒவ்வொரு கன்றிற்கும் 2 கூடை மாட்டெரு அல்லது கூட்டெருவைப் பயன்படுத்துவதன் மூலம் பசளைத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

### விளைவு

உள்ளூர் இனம் நட்டு 3 — 4 வருடங்களில் காய்க்க ஆரம்பிக்கும். ஏனைய இனங்கள் 12 — 13 மாதங்களில் காய்க்க ஆரம்பிக்கும். உள்ளூர் இனமும், தகிட்டி இனமும் ஆண்டில் இரு தடவைகள் விளைத்தலைத் தரும். ஆனால், லெமனையும் ஆண்டு முழுவதும் விளைச்சலைத் தரும்.

## கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே.

1. எயிட்ஸ் நோயைத் தோற்றுவிக்கும் கிருமி எது?
2. சிங்கராஜ வனத்தில் காணப்படும் புற்றுநோயைக் குணமாக்க வல்ல மூலிகையின் பெயரென்ன?
3. இலங்கையின் எப்பகுதி முருகை இனப் பாறைகளுக்குப் பெயர் போனது?
4. புகைப் பிடிப்பவர்களின் நரம்பு மண்டலத்தைத் தூண்டி உற்சாகப்படுத்தும் புகையிலையில் காணப்படுகின்ற பொருளெது?
5. 1984 டிசெம்பர் மாதம் பிண நகரமாகிய நாடெது?
6. 1815 - 1816 வரையான காலப்பகுதியில் உலகக் காலநிலையினை மாற்றியமைத்த நிகழ்வென்ன?
7. மனிதக் குண்டு என வர்ணிக்கப்படும் நோயெது?
8. உலகில் மிக உயரத்தில் அமைந்துள்ள நன்நீர் ஏரி எது?
9. இந்தியாவில் முதன்முதல் அணுகுண்டுப் பரிசோதனை எப்போது நடாத்தப்பட்டது?
10. சூரிய ஒளிக்குடுவை என்றால் என்ன? (Bottle of Sunlight)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்ப மரம்

*தொகுப்பு: கு. விமலேஸ்வரன், மன்று ஆதாரம்: விவசாயச் செய்தி.*

ஓர் அரசு ஆலும் வேம்பும்
ஒரு பத்துப் புளியும் மூன்று
சீருடன் விளாவும் வில்வம்
மூன்றுடன் சிறந்த நெல்லி
பேர்பெறும் ஐந்து தென்னை
பெருகுமா ஐந்தும் என்றும்
யார் பயிர் செய்தா ரேனும்
அவர்க் கில்லை நரகம் தானே.

(கார்த்திகைப் புராணம்)

வேப்ப மரம் பெரிய விருட்சமாக வளர்வதுடன் அநேக ஆண்டுகள் உயிர் வாழும் தன்மையும் கொண்டது. கடும் வரட்சியிலும் கூட செழிப்பாகவே காணப்படும். இதனுடைய தாவரவியற் பெயர் ''அசடிரக்கா இண்டிக்கா'' (Azadiracta Indica) என்பதாகும். வேம்பு வருடத்திற்கு ஒரு முறையே பூத்துக் காய்க்கும். 4 - 5 வருடங்களில் காய்க்கத் தொடங்கும். ஒரு மரத்திலிருந்து 30 - 50 கி. கி. விதைகள் ஒரு போகத்திற்குக் கிடைக்கும். பறவைகள் இதன் பழத்தைச் சாப்பிட்டு அவற்றின் எச்சங்கள் மூலம் விதைகள் விழுந்து முளைக்கின்றன. வீடுகளிலும் தோட்டங்களிலும் சிலர் கன்றுகளையும் நட்டு உற்பத்தி செய்வர். காற்றுத்தடையாக மட்டுமன்றித் தளபாடங்கள், கட்டடங்களுக்கும் பயன்படுகின்றது. குளிர்ச்சியான நிழலையும் தருகின்றது. வேப்பமரத்தின் இலை, பூ, காய், விதை, கட்டை, ஈர்க்கு ஆகியவை வைத்தியத்திற்கு மிகவும் பயன்படுகின்றன. வேப்பம் குச்சியினால் பல் துலக்கும்போது பல் ஈறுகள் வலிமையடைவதுடன், நோய்க் கிருமிகளும் அழிக்கப்படுகின்றன. வேம்பின் இலை, விதை என்பன இயற்கைக் கிருமி கொல்லிகளாகும். ''அம்மை நோய்'' ஏற்பட்டால், கிருமிகள் பரவாமல்தடுக்க இலை பயன்படுத்தப்படுகின்றது. இலையை அரைத்து உருண்டையாக விழுங்குவதும் உண்டு. இதனால், உடம்பில் உஷ்ணம் குறைவதுடன், ஏனைய கிருமிகளும் அழிக்கப்படுகின்றன. இலை, பூ, காய், பட்டை எல்லாவற்றிலும் கசப்புத் தன்மை உண்டு. விதையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், பல நோய்களையும் நீண்ட நாள் ஆறாத புண்களையும் குணப்படுத்துகின்றது. வேப்பம் பூவில் வடகம் செய்து உணவுடன் பயன்படுத்தலாம். அத்துடன் வேப்பம் பட்டையை உப்பு நீரில் இட்டு அவித்து அதன் சாற்றை கொப்பளித்தால் பல் வியாதியைக் கட்டுப்படுத்தலாம். வேம்பு, விவசாயத்திலும் பெரும் நன்மை பயக்கிறது. பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும், சிற்றுண்ணிகளையும், விலாங்குப் புழுக்கள் மற்றும் கிருமிகளையும் கட்டுப்படுத்தும் சக்தி இதற்கு உண்டு என ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. இந்திய விவசாயிகள் இதை அதிகம் பயன்படுத்துகின்றனர். வேப்பிலையினை நெல்லுடன் கலந்து சேமிக்கும்போது அந்துப்பூச்சிகளில் இருந்து பாதுகாக்கலாம். வேப்பிலைச் சாற்றைத் தெ... பதன் மூலம் பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்தலாம். அதிக சூரியஒளி படும்போது அவற்றின் செயல்திறன் குறையும். ஆகவே, ஒளி குறைந்த காலை, மாலை நேரங்களில் சாற்றைத் தெளிப்பது நல்லது.

வேப்பம் பிண்ணாக்கை மண்ணுடன் கலந்து உழுதுவிட்டால் மணி வேரை துண்டாக்கும் விலாங்குப் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம். பிண்ணாக்கு நீரில் சேரும்போது முறியாப் பசளையின் செயற்பாடும் அதிகரிக்கின்றது. சூழல் நச்சுத் தன்மையடைவதைக் குறைப்பதே ஒருங்கிணைந்த பூச்சு புழு முகாமைத்துவத்தின் நோக்கம்.

ஆகவே, இயற்கைப் பூச்சி கொல்லியான வேப்ப மரத்தை எங்கும் வளர்த்து அதிலிருந்து உச்சபலனைப் பெற உதவுங்கள். மர நடுகையின்போது வேப்ப மரத்தையும் சேர்த்துக் கொண்டால் இனிதாய் அமையும். வாரீர்! வேப்ப மரம் நடுவோம்!

### ஆரோக்கியத்துடன் வாழ கைகளைக் கழுவுங்கள்
## எப்போது தெரியுமா?

1. மலசல கூடத்திற்குச் சென்ற பின்பு.
2. விளையாட்டிற்குச் சென்ற பின்பு.
3. உணவருந்த முன்னும் பின்னும்
4. உணவு சமைக்கும் முன்பு.

### ஆரோக்கியத்துடன் வாழ சுற்றாடல் கவனம்
## யாது தெரியுமா?

1. இலையான் பற்றிக் கவனம் இருக்க வேண்டும்.
2. இலையான்கள் நோய்களைப் பரப்புகின்றன.
3. எமது உணவுகளை இலையானி லிருந்து பாதுகாக்க வேண்டு மாயின் மூடி வைப்பதே நலம்.

ஆக்கம்: செல்வி ந. டிலூக்ஷி,
ஆண்டு - 5,
மட்/வின்சன்ட் மகளிர் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுச் சுடர்

## இன்றும் அதே நிலை

ஆக்கம்: திருமதி வி. இராமச்சந்திரா (ஆசிரியர் குழு)

நாகரீக மோகங்கொண்ட இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் விண்ணைத் தொடும் மாடிக் கட்டடங்களும், பொருளாதாரத்தைப் பெருக்கும் பாரிய தொழிற்சாலைகளும், ஒன்றன்பின் ஒன்றாக ஊர்ந்து செல்லும் வாகனங்களின் பேரிரைச்சலும், இரவைப் பகலாக்கும் மின் கம்பங்களின் இழை விளக்குகளும், வைத்தியசாலை, தபாற் கந்தோர், பொதுச் சந்தையென விறுவிறுப்புடன் விரைந்து செல்லும் மக்கள் கூட்டமும், நாளாந்தம் நம் கண்முன் நிகழும் காட்சிகள் தான் என்றாலும் இவை எதுவுமே இல்லாது ஏங்கித் தவிக்கும் இயற்கைக் கிராமம் ஒன்று இங்கு உளளதென்றால் வியப்பாக இருக்கின்றதா? ஆம் அது மட்டுநகரின் தெற்கே குறுமண்வெளியின் மேற்கே வாவிக்கரையோரத்தில் தான் அமைந்துள்ளது. இயற்கை எழில் என்றும் குன்றாத பசிய கோடைப் பூக்களையும், கோரைப் புற்களையும் கொண்டிருந்ததால் கோரைமடு என்றும் அழைக்கப்பட்டு நாளடைவில் கோடைமடு ஆகிவிட்டது. விரல்விட்டு எண்ணக்கூடியளவு ஆங்காங்கே சிறு குடிசைகளும் ஒரு சில கல் வீடுகளுமே காணப்பட்டாலும் கிராமத்தின் நடுவில் கல்விக்கண் திறக்கும் ஒரு சிறிய பாடசாலையும் அமைந்துள்ளது.

முன்னர் கூட்டங்களைக் கூட்டுமிடமாகவும், பக்தர்களின் ஒன்றுகூடல் தலமாகவும், ஓங்கி நிமிர்ந்து நின்று நிழல் கொடுக்கும் முன்னூறு ஆண்டுகளையும் மிஞ்சிவிட்ட கூளா மரமொன்று சல சலவென்ற தென்றற் காற்றைச் சகலருக்கும் வாரி வழங்கி காற்றைக் குளிரூட்டி எயார்கண்டிஷன் வேலையை இலவசமாகச் செய்து கொண்டிருக்கிறது. இதனால் குளிரூட்டியின் குளோரோபுளோரோ காபன் சேர்வையும் மேலதிக மின் கட்டணமும் இன்றி இயற்கை அன்னையின் அரவணைப்பில் பூமித்தாய் பூரிப்படைகின்றாள்.

காலைக் கதிரவன் கண் விழிக்கும் முன் எழுந்து கையில் மண்வெட்டியுடனும் குடத்துடனும் ஆண் பெண் வேறுபாடின்றி எல்லோரும் ஒற்றுமையாய்த் தங்கள் தங்கள் தோட்டங்களில் சுறுசுறுப்புடன் வேலை செய்கின்றனர். இதனால் வீணான பொழுது போக்கின்றி தாய் தந்தையரை அடிபணிந்து தொழில் செய்வதைக் காணமுடிகிறது.

பாடுபடும் பாட்டாளி மக்களில் ஒரு சிலர் ஒரு படி முன்னேறி அக் கிராமத்தைவிட்டு அகன்றுவிட எஞ்சிய பாமர மக்கள் மாடுகள் மேய்த்தும், தோட்டங்கள் செய்தும் விவசாயிகளாகவும் சுற்றியுள்ளவர்களுக்குச் சுவையான புத்தம் புதிய சத்துள்ள காய் கறிகளைக் கறிசமைத்துண்ண வழிகாட்டுகின்றனர்

தோட்டத்திற்குத் தேவையான உரத்தினைத் தங்கள் மந்தைகளிலிருந்தே பெற்று வருடம் முழுவதும் பயிர் செய்யுமளவிற்கு, நிலத்திற்கு இயற்கைப் பசளையை வாரி வழங்கினர். சூழலை மாசுபடுத்தாத இச்செய்கையால் பூமித்தாய் பூரித்துத் தன் பொன்னான பயிர் இனங்களை நன்றாக வளர்த்துவிட, கணவனும் மனைவியுமாய் காய்கறிகளை எடுத்துச்சென்று விலைபேசி விற்றுத் தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொள்வர்.

ஐம்பத்தேழு குடும்பங்களே குடியிருக்கும் இக் கிராமத்தில் தற்போது அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் எவரும் கிடையாது. வியப்பாகத்தான் இருக்கின்றது. ஆமாம், நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளே பழமையுடன் புதுமையையும் கலந்து பயிர் செய்யத் தொடங்கிவிட்டனர். நெடுநாட்கள் தொடர்ந்து பயிர் செய்து வளங்குன்றிய நிலத்திற்குச் செயற்கை வளமாக்கிகளைத் தாராளமாகப் பாவித்தனர். பொறுமையுடன் கழிவுகளைக் கலந்து கலவைப் பசளை தயாரித்திடத் தவறியதால் முன்னரைப் போல் அதிக விளைவும் கிடைக்கவில்லை. அத்தோடு, விளைவைப் பாதிக்கும் பீடைகளின் தொல்லையைப் போக்கப் பல நாசினிகளையும் அதிகம் பயன்படுத்தத் துணிந்துவிட்டனர். இதன் விளைவால் தற்பொழுது அதிக இலாபம் கிடைப்பதில்லை என அங்கலாய்க்கின்றனர்.

ஏறத்தாழ எழுபது வயதை எட்டிப்பிடித்த மூதாட்டியிடம் அக்கிராமத்தைப் பற்றிக் கேட்டபோது அவர் கூறிய சுவையான தகவல் ஒன்றை உங்களுக்குத் தருகின்றேன். ''அக்காலத்தில் எங்களைக் கொல்வதற்கு வெளிநாட்டார் நச்சு மரவள்ளியையும் சீரகக் கொச்சியையும் அனுப்பினார்கள். ஆனால், எங்கள் கிராமத்தில் நிறைந்திருந்த மருத மரங்கள் அதன் நஞ்சை உறிஞ்சிவிட்டன. அதனால், நாங்கள் உயிர் தப்பிவிட்டோம்'' என்றார். இக் கூற்றில் பொதிந்துள்ள உண்மைகளை ஆராய்ந்து தான் பார்க்கவேண்டும்.

மரவள்ளிக் கிழங்கில் ஐதரோசயனைட் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சுப் பொருள் காணப்படுகிறது. இதனால் தான் கிழங்கினை அவிக்கும்போது அதிக நீர்விட்டுத் திறந்து அவிக்கின்றோம். மரவள்ளி, கத்தரி, மிளகாய், கீரைவகை போன்றவற்றைப் பயிரிடுவதோடு அயலிலுள்ளவர்களின் காய்கறிகளையும் வாங்கி விற்கும் பெருந்தன்மை படைத்த அக் கிராம மக்கள் எல்லோரும் ஒற்றுமையாய் வாழவதைக்காண முடிந்தது.

சூழலை மாசுபடுத்தும் ஆலைகளோ, வாகனங்களோ இன்றி இன்றும் அதே நிலையில் இருக்கும் அக் கிராமத்தவர்களின் அவலநிலை கண்ட 'உலக தரிசனம்' என்னும் **(World Visjon)** நிறுவனம் அவர்களின் இருளைப் போக்கிக் குழந்தைகளின் ஒளிமயமான வாழ்விற்குச் சகல விதத்திலும் உதவ முன்வந்துள்ளது. அதன் உதவியுடன் கல்வித் தேவைக்கான உபகரணங்கள் தொடக்கம் கல் வீடுகள் வரை உயர்ந்து வாழ்வதற்கு உதவி கிடைக்கிறது. இவ்வாறு அளப்பரிய சேவையாற்றும் அந் நிறுவனத்தைக் கண்ணெனப் போற்றும் மக்கள் அதனூடாகவே தாங்கள் எதையும் செய்ய விரும்புகின்றனர். பலருடன் உரையாடியதிலிருந்து அக்கிராமத்துக்குப் பொருத்தமான மருதங்கன்றுகளை விரும்பி வளர்ப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். அத்தோடு சூழல் பாதுகாப்பிற்கான மரம் நடுகைத் திட்டத்திற்குத் தேவையான நாற்றுமேடைகளையும் தாங்கள் தயாரித்துத் தருவதற்கும் விரும்புகின்றனர்.

எனவே, இவ்வாறான கிராமிய மக்களின் ஒத்துழைப்பினை 'மன்று' என்றும் வரவேற்கும் என ஏனைய கிராமத்தவருக்கும் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

---

*(3ம் பக்கத் தொடர்ச்சி...)*

## மண் பாதுகாப்பு

அதனால்தானே
என்னையே தறித்து
விட்ட - உனது
வீடுகளுக்குள்
உன்னையே துரத்தி
உள்ளேயே தஞ்சமடைய
வெள்ளமாகப் பாய்கின்றேன்!

ஆனால் விதி என்று
பிதற்றுகின்றாய்
மனிதா!
பாவம் நீ
அப்பாவி
உன் கைகளே
உனக்கு விலங்கிட்டுக்
கொள்வதை நீ
புரிந்து கொள்ளவில்லை!

இறுதியாக உனக்கோர்
அறிவுரை

நீ கொஞ்சம் புதர்களை நடு
அது மண்ணைப் பதமாக்கி
வைத்துக் கொள்ளும்
அது உனக்கு அழகையும் தரும்
முற்றத்தில் மரங்களை நட்டுக்
கொள் - அது உனக்கு
நற் சுகத்தையும்
நற் சுவாசத்தையும் தரும்!

நீ
பெரிதாக என்னைப்
பாதுகாப்பதாக நினைத்து
மண் பாதுகாப்பு நாளை
வீணாக்காதே!

அந்த நாள் - உனது
பாதுகாப்பிற்கே - உரியநாள்
அதை - நீ எவ்வளவு
விசேடமாகக்
கவனிக்கிறாயோ
அது
மண்ணையும் - உன்
உயிரையும்
பாதுகாத்துக் கொள்வதற்கு
உதவும்!

மரம் நடுவதால்
மண் வளம் செழிக்கும்!
மலை வளம் உயரும்!
மழை வளம் பெருகும்!
மனுவளம் பிறக்கும்!
மண்ணுலகே மாண்புறும்!

---

# ஐம்பது கோடி மக்களுக்கு சாப்பிட எதுவுமேயில்லை

எந்தவொரு நாளிலும், உலகத்தில் உள்ள சுமார் ஐம்பது கோடி மக்கள் எதையுமே சாப்பிட வழியின்றித் தவிக்கிறார்கள். மேலும் ஐம்பது கோடி மக்கள் நாளொன்றில் ஒன்று அல்லது இரண்டு தரமே சாப்பிடக்கூடிய நிலையில் உள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் ஒரு இலட்சம் பிள்ளைகள் தமது பார்வையை இழக்கின்றனர். காரணம், உயிர்ச்சத்து ''ஏ'' குறைபாடு. (இவ்வுயிர்ச்சத்து கடும் பச்சை இன மரக்கறிகளிலும், கரட்டிலும் காணப்படுகிறது.)

ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, இமாலயப் பிரதேசம் ஆகிய இடங்களிலுள்ள பெண்கள் அயோடின் குறைபாட்டினால் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் பெண்களில் 5 சதவீதத்தினர் மனநோய்க்குள்ளாகிறார்கள்.

ஆதாரம்: கமநலம், புரட்டாதி, 1982.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

## மண்முனை வடக்குப் பிரதேச சுற்றாடல் ஊக்குவிப்புக் குழுக் கூட்டம்

1994-09-12 அன்று மண்முனை வடக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதே சுற்றாடல் ஊக்குவிப்புக் குழுக் கூட்டம் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

சுற்றாடல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஈ. பி. ஏ. / இ / 23 / 2 இலக்க சுற்று நிருபத்திற்கமைய கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும், குழுவின் அமைப்பு, கடமைகள் பற்றியும் உதவிப் பிரதேச செயலாளர் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மண்முனை வடக்கு சுற்றாடல் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது. அவை பின்வருமாறு:

1. மாநகரக் குப்பைகள் அகற்றுதல்.
2. மண்ணகழ்வு.
3. கிறவல் எடுத்தல்.
4. புதுப்பாலத்தின் அமைப்பு.
5. கட்டாக்காலிகளின் தொல்லை.
6. நீர் வற்றுதல்.
7. பெற்றோழியப் பொருட்களினால் கிணற்றுநீர் மாசடைதல்.
8. கண்ணாக் காடுகள் அழிக்கப்படுதல்.
9. நீர் ஒதுக்கீட்டுக் காணிக் குடியேற்றம்.
10. சதுப்பு நிலக் குடியிருப்பு.
11. பொது வைத்தியசாலைக் கழிவுகள், குறைபாடுகள்.
12. நகர் நிர்மானிப்பு அடிப்படைத் திட்டமின்மை.
13. வாகனப் புகை.

அடுத்த கூட்டத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வுடனும், பொருத்தமான வேலைத் திட்டங்களுடனும் அனைவரையும் சமூகமளிக்கும்படி உதவிப் பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டார்.

"மன்று"
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.

IN24. MR. K. SANMUGAM
TEACHER
NADUVIL THAMBI VEETHY
VANTHARUMOOLAI.

இப்பிரசுரம், மட்டக்களப்பு ஜெஸ்கொம் அச்சகத்தில் அச்சிட்டு
மன்று இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org